I ADDL. DISTRICT & SESSIONS COURT, VELLORE
DEPOSITIONS OF WITNESSES
(CHAPTER XXIII CODE OF CIVIL PROCEDURE)
DEPOSITIONS OF WITNESSES P.W.1
OS.NO.70/2022

Name : Raghavan
Father/Husband Name : Sampath

Age : 38

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 19.11.2025

இரு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**விசாரணை தொடங்கும் நேரம்: 03.50 p.m**

**பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

இந்த வழக்கை எனக்கு வரவேண்டிய தொகைக்காக தாக்கல் செய்துள்ளேன். தாவா புரோநோட்டில் கையெழுத்து போடப்பட்டுள்ளதாக சொல்வது யார் என்றால் துரைராஜ் என்பவர் கையெழுத்து போட்டுள்ளார். துரைராஜ் எனக்கு எப்படி பழக்கம் என்றால் என் மனைவின் மாமா தயாளன் என்பவர் மூலமாக தெரியும். எத்தனை ஆண்டுகளாக துரைராஜ் பழக்கம் என்றால் எனக்கு துரைராஜ் அவ்வளவாக பழக்கம் இல்லை தயாளன் என்பவருக்கு தான் பழக்கம்.

நான் என்ன செய்கிறேன் என்றால் வியாபாரம் செய்து வருகிறேன். என்ன வியாபாரம் செய்கிறேன் விளம்பர கம்பனி வைத்து நடத்தி வருகிறேன். சுமார் 10 வருடங்களாக விளம்பர கம்பனி நடத்தி வருகிறேன். விளம்பர கம்பனி நடத்த சட்ட படி உரிமம் பெற்று நடத்தி வருகிறேன்.

என்னுடைய வரவு செலவு கணக்குகளை வருமான வரி கணக்கில் தாக்கல் செய்கிறேன். 2019 ஆம் ஆண்டிற்கான என் வருமான வரி

கணக்கை பார்த்தால் இந்த பரிவர்த்தனை விவரங்கள் அதில் தெரியும் என்றால் தெரியாது, ஏன் என்றால் 2 மாதத்தில் கொடுத்துவிடுவதாக சொல்லி வாங்கியதால் அதில் சொல்லப்படவில்லை. 2 மாதத்தில் அவருக்கு சட்ட பூர்வமான அறிவிப்பு கொடுத்தேனா என்றால் இல்லை.

அவர் 2 மாதத்தில் கொடுப்பதாக சொல்லப்பட்டுள்ள நிலையில் ஏன் நான் எந்த ஒரு முயற்சியும் எடுக்கவில்லை என்றால் நான் தயாளனை அழைத்து பேசினேன். தயாளன் என்னிடம் பணம் தரேன் என்று கூறியதாகவும் வாங்கி கொடுத்துவிடுவதாகவும் கூறினார்.

நான் சொல்லும் துரைராஜ் என்பவர் பூட்டுத்தாக்கு பகுதியை சேர்ந்தவர். அவர் அங்கு தான் வசித்து வந்தார். நான் சொல்லும் தயாளன் பூட்டுத்தாக்கு கிராமத்தை சேர்ந்தவர் தான் தற்போது விஷாரத்தில் வீடு கட்டி போயுள்ளார்.

என்னுடைய மாத வருமானம் எவ்வளவு என்றால் ஒவ்வொரு மாதமும் வேறுபடும். சராசரியாக என் மாத வருமானம் என்றால் ரூ.10,00,000/க்கு GST செலுத்தி வருகிறேன். அந்த ரூ.10,00,000 வருமானத்திற்கு வருமான வரி செலுத்தி வருகிறேன். ஆனால் அதை காட்டுவதற்கு எந்தவித ஆவணமும் சமர்ப்பிக்கவில்லை என்றால் சரிதான்.

துரைராஜ் என்பவருக்கு திருமணமாகவில்லை என்றால் சரிதான். அவர் தனியாளாக இருந்தால் என்றாலும் அவருக்கு காசு தேவையில்லை என்றால் சரியல்ல, அவர் ஜல்லி மிஷன் ஆரம்பிக்க பணம் தேவைப்படுவதாக சொல்லி தயாளனும் அதே வியாபாரத்தில் இருப்பதால் அவர் வந்து என்னிடம் 2 மாதத்தில் கொடுத்துவிடுவார் என்றும் emergency ஆக தேவைப்படுகிறது என்றும் கேட்டார்.

தயாளன் முன் நின்று சொன்னதின் காரணமாக தான் நான் பணம்

கொடுத்தேன் என்றால் சரிதான். துரைராஜ் பணம் கொடுக்கவில்லை என்றால் தயாளன் கொடுக்க கடமைப்பட்டவர் என்றால் சரியல்ல. எனக்கு முன் பின் தெரியாத நபருக்கு ரூ.20,00,000 த்தை கொடுப்பீர்களா என்றால் வட்டி கொடுப்பதாக சொன்னதால் நான் கொடுத்தேன்.

நான் வியாபாரம் செய்வதால் வங்கி நடைமுறை விதிகள் எனக்கு தெரியும் என்றால் சரிதான். ரூ.20,000 க்கு மேல் பணமாக கொடுக்க கூடாது என்றாலும் காசோலை மற்றும் இணைய வழியில் தான் பணம் பரிமாற்றம் செய்யப்பட வேண்டும் என்றால் சரிதான்.

வா.சா.ஆ. 1 ஆவணத்தில் நான் சொல்லும் தேதியில் துரைராஜ் என்பவர் கையெழுத்து போடவில்லை என்றால் சரியல்ல.துரைாஜ் என்பவர் ஜல்லி மிஷன் வாங்க தான் பணம் வாங்கினார் என்ற விவரத்தை என்னுடைய பிரமாண வாக்குமூலத்திலோ அல்லது பிராதிலோ சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை.

துரைராஜ் என்பவரிடம் பல முறை பணம் கேட்டேன் என்று சொல்லும் நிலையில் எந்தெந்த தேதியில் எங்கு வைத்து கேட்டேன் என்றால் நான் தயாளன் என்பவரிடம் மட்டும் தான் கேட்டேன். நான் மேற்சொன்ன விவரத்தை என்னுடைய பிரமாண வாக்குமூலத்திலோ அல்லது பிராதிலோ சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை.

நான் கடைசியாக துரைராஜை எப்போது பார்த்தேன் என்றால் சத்துவாச்சாரி ஓட்டலில் 16.08.2019 ல் பார்த்தேன். என்னுடன் யார் இருந்தார்கள் என்றால் தயாளன், பலராமன் மற்றும் சுரேஷ் ஆகியோர்கள் இருந்தார்கள். துரைராஜ் எப்போது இறந்தார் என்றும் யார் மூலமாக விவரம் தெரியவந்தது என்றால் 21.09.2019 ல் துரைராஜ் இறந்ததாக தயாளன் என்பவர் தெரிவித்தார்.

அவர் இறந்த செய்தியை அறிந்தபின் நான் என்ன செய்தேன் என்றால் வெயிட் செய்யுங்கள் வாங்கி கொள்ளலாம் என்று தயாளன் தெரிவித்தார். இறந்துபோனது தெரிந்தும் யாரிடம் வாங்கி கொள்ளலாம் என்று சொன்னார் என்றால் அவருடைய வாரிசுகள் சதீஷ் மற்றும் ராஜாமணி ஆகியோர்களிடம் வாங்கி கொள்ளலாம் என்று சொன்னார். அவர் எப்படி இறந்தார் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது.

அதன் பின்னர் எதாவது சட்டப்படியான நடவடிக்கை எடுத்தேனா என்றால் எடுக்கவில்லை, அதனால் தான் நீதிமன்றம் வந்துள்ளேன் என்று சாட்சி சொல்கிறார். நீதிமன்றத்தில் எப்போது வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் சுமார் 2, 3 வருடங்கள் ஆனது. 2019 லியே துரைராஜ் இறந்துள்ள நிலையில் 2022 வரை ஏன் காத்திருந்தேன் என்றால் தயாளன் என்பவர் அவர்களுக்கு பிராப்பர்டி உள்ளது வாங்கி தருகிறேன் என்று சொன்னார்.

அவர்களுக்கு சொத்து உள்ளதா இல்லையா என்ற விவரம் எனக்கு தெரியாது. ஆனால் பணம் வாங்கும்போது அவருக்கு சொத்து உள்ளது என்று சொல்லி தான் வாங்கி கொடுத்தார். சொத்து இருக்கிறது என்றால் அது குறித்த ஆவணங்களை பரிசீலித்தேனா என்றால் தயாளன் என்பவருக்கு தான் தெரியும்.

எனக்கும் துரைராஜ் என்பவருக்கும் முன் பின் பழக்கம் இல்லை என்றாலும் துரைராஜிக்கும் தயாளனுக்கும் தான் பணம் கொடுக்கல் வாங்கல் இருந்தது என்றாலும் தயாளனிடம் பணம் இல்லாததால் என்னிடம் வாங்கி கொடுத்தார். அவ்வாறாயின் நான் தயாளன் என்பவரிடம் தான் புரோநோட் வாங்கியிருக்க வேண்டும் என்றால் சரியல்ல, துரைராஜ் என்பவருக்கு பணம் வேண்டும் என்பதால் தான் வீட்டிற்கு அழைத்து வந்தார்.

நான் சொல்வது படி என் வீட்டில் வைத்து ரூ.20,00,000 கொடுத்தேன் என்றால் சரிதான். அந்த ரூ.20,00,000 வீட்டிற்கு எப்படி வந்தது என்றால் என் மனைவியின் நகையை வங்கியில் அடகு வைத்து பக்கத்தில் இடம் வாங்குவதற்காக வீட்டில் பணம் வைத்திருந்தேன். இந்த விவரத்தை என்னுடைய பிரமாண வாக்குமூலத்திலோ அல்லது பிராதிலோ சொல்லவில்லை என்றால் சரிதான்.

மனைவியின் நகைகளை அடகு வைத்தேன் என்பதற்கு எந்த ஆவணத்தையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான், தேவை என்றால் நான் வங்கி கணக்கு தாக்கல செய்கிறேன் என்று சாட்சி சொல்கிறார்.

என் வீட்டிற்கு பக்கத்து நிலம் விலைக்கு வந்ததாக சொல்வதற்கும் எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் பேசி கொண்டுதான் இருந்தோம் ஆனால் முடிவு செய்யவில்லை. பக்கத்து நிலம் பேசி முடிவு செய்யப்படாத நிலையில் ஏன் நகையை வைத்து பணம் பெற்று வீட்டில் வைத்திருந்தேன் என்றால் விலை நிர்ணயம் செய்ய வைத்திருந்தோம். இடைப்பட்ட நேரத்தில் வட்டி கிடைக்கும் என்பதால் பணம் கடன் கொடுத்தேன் என்று சாட்சி சொல்கிறார்.

துரைராஜிக்கு எழுத படிக்க தெரியும். அவர் என்ன படித்துள்ளார் என்றால் தெரியாது. அவர் எப்படி கையெழுத்து போடுவார் என்று தெரியுமா என்றால் தெரியும். வா.சா.ஆ. 1 ஆவணத்தை எழுதியது யார் என்றால் சுரேஷ் என்பவர் தான். அவர் என்றைய தேதியில் எழுதினார் என்றும் அவருடைய முழு முகவரியும் வா.சா.ஆ. 1 ல் குறிப்பிட்டுள்ளரா என்றால் குறிப்பிடப்பட்டுள்ளார். ( சாட்சி சொல்கிறார் 3 பேரும் அவர்களை சார்ந்தவர்கள்)

3 பேரும் அவர்களின் கையெழுத்து மற்றும் முகவரி ஆகியவை எழுதப்பட்டுள்ளது. வா.சா.ஆ. 1 ஆவணத்தில் யார் யார் சாட்சி கையெழுத்து போட்டுள்ளார்கள் என்றால் தயாளன், பலராமன் மற்றும் சுரேஷ் ஆகியோர்கள் போட்டுள்ளார்கள்.

பிராதுக்கு பிரதிவாதிகள் என்று பதிலுரை தாக்கல் செய்துள்ளார் என்று தெரியுமா என்றால் தெரியாது. அது தெரியாமலேயே நான் நிரூபண பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துவிட்டேன் என்றால் சாட்சி சொல்கிறார் அவர் ரூ.20000 மட்டும் வாங்கியதாக பதில் தாக்கல் செய்துள்ளார்.

அவருடைய அவசர தேவைக்காக ரூ.20,000 தான் வாங்கினார் என்றாலும் அந்த புரோநோட்டை நான் தயாளன் என்பவருடன் கூட்டு சேர்ந்து தயாரித்துள்ளேன் என்றால் சரியல்ல. துரைராஜ் என்பவருக்கு அதிகப்படியான பண தேவை இல்லாத நிலையில் அவர் பெரிய தொகையை வாங்க வேண்டிய அவசியமில்லை என்றால் சரியல்ல.

நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் புரோநோட்டை தவிர வேறு என்ன ஆவணம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் துரைராஜின் இறப்பு சான்று, வாரிசு சான்று தாக்கல் செய்துள்ளேன். எனக்கு எழுத படிக்க தெரியும். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ. 2 யாருடைய இறப்பு சான்று தாக்கல் செய்தள்ளேன் என்று பார்த்து சொல்லுங்கள் என்றால் தாமோதரன் என்பவரின் இறப்பு சான்றிதழை தாக்கல் செய்துள்ளேன்.

துரைராஜிக்கோ அல்லது இந்த வழக்கின் பிரதிவாதிகளுக்கோ நான் எந்தவித அறிவிப்பும் அனுப்பவில்லை என்றால் சரியல்ல, வழக்கு தாக்கல் செய்த பிறகு அனுப்பியுள்ளேன். அந்த தேதியில் என்னிடத்தில் எனக்கு

இவ்வளவு பெரிய தொகை வழங்க source இல்லை என்றால் சரியல்ல, எனக்கு உள்ளது. வழக்கில் இந்த 3 ஆவணத்தை தவிர வேறு எந்த ஆவணத்தையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

அதேபோல் நான் என் மனைவியின் நகை வைத்து நான் வாங்கிய கடன் மற்றும் மேற்சொன்ன விவரங்களுக்கு ஆதாரங்கள் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. இந்த வழக்கில் மொத்த செய்தியும் தயாளன் என்பவருக்கு தான் தெரியும் என்றால் அவர் தான் துரைராஜிக்கு நீண்ட நாள் பழக்கம்.

வா.சா.ஆ. 2 மற்றும் 3 ஆவணங்கள் எப்படி எடுத்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் அந்த ஏரியாவில் கொடுத்தார்கள் என்று தயாளன் வாங்கி வந்து வழக்கறிஞரிடம் கொடுத்தார். வா.சா.ஆ. 2 மற்றும் 3 ஆவணங்கள் இரண்டுமே நகல் தான் என்றால் சரிதான். அதற்குண்டான மெய்பிப்பு சான்று எதாவது நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

துரைராஜ் என்பவர் அவருடைய அவசரத்திற்காக சிறிய தொகையான ரூ.20,000 த்தை திருப்பி கொடுத்துவிட்டார் என்றால் சரியல்ல, ரூ.20,000 க்கு புரோநோட் வாங்க வேண்டிய அவசியமில்லை என்று சாட்சி சொல்கிறார். இந்த தகவல் தயாளன் என்பவருக்கு நன்றாக தெரிந்திருந்தும் தயாளன் என் மனைவியின் மாமா என்பதால் அவருடன் சேர்ந்து இந்த வா.சா.ஆ. 1 ஆவணத்தை தயார் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

வா.சா.ஆ. 1 ஆவணத்தில் உள்ள தேதியில் துரைராஜ் கையெழுத்து போடவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ. 1 புரோநோட் தேதியிலிருந்து அவர் எவ்வளவு மாதத்தில் காலமானார் என்றால் அவர் 4 மாதங்கள் கழித்து

காலமானார். வா.சா.ஆ. 1 தேதியிலிருந்து அவரை கேட்டுக்கொண்டிருந்தேன் என்றால் 1 மாதம்,2 மாதம்,3 மாதம் வரை கேட்டு கொண்டிருந்தேனா என்றால் 2 வது மாதத்திலிருந்து கேட்டு கொண்டிருந்தேன். அதே போல் 3 வது மாதமும் கேட்டேன்.

துரைராஜ் என்பவர் தயாளன் என்பவருக்கு ஏற்கனவே எழுதி கொடுத்த ஆவணத்தை வா.சா.ஆ.1 தேதியில் தயார் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வழக்கு காலதோஷத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. உரிய தரப்பினரை சேர்க்காததாலும் இந்த வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. பிரதிவாதிகளை தேவையில்லாமல் இந்த வழக்கில் சேர்த்து அலைகழித்துள்ளேன் என்றால் சரியல்ல. மேற்படி வழக்கானது பிரதிவாதிகளின் செலவு தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டிய வழக்கு என்றால் சரியல்ல.

ஏற்கனவே பைசல் செய்த ஆவணத்தை தவறாக பயன்படுத்தி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

**விசாரணை முடிந்த நேரம்:** 04.45 p.m

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பித்து சரி என்று ஒப்புக் கொண்டு கையெழுத்திட்டார்.

G SANTHI

Digitally signed by G SANTHI
Date: 2025.11.19 16:47:21 -0100

முதலாவது கூடுதல் அமர்வு நீதிபதி,
வேலூர்.